# أحكام المسح على الخفين

## காலுறையின் மேல் மஸஹ் செய்வது சம்பந்தமான சட்டங்கள்.

ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,

ம:.ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

WWW.MAHADSUNNAH.COM

www.alsarhaan.com

# காலுறையின் மேல் மஸஹ் செய்வது சம்பந்தமான சட்டங்கள்.

**அல்லாஹ் மார்க்கத்தில் உங்களுக்கு சிரமத்தை ஏற்படுத்த விரும்ப மாட்டான், மாறாக அவன் உங்களை தூய்மைப்படுத்துவதற்கும் அவன் நி:மத்தை முழுமைப் படுத்துவதற்குமே விரும்புகின்றான்.**

அடியார்கள் மீது அல்லாஹ் கொண்ட அருளின் வெளிப்பாடுதான் வுழூ செய்யும்போது சொக்ஸ், காலுறையின் மேல் தடவிக் கொள்வதற்கு சலுகை வழங்கியிருப்பது.

இரு கால்களையும் கழுவுவதற்கு பதிலாக ஒருவர் தன்னுடைய காலுறையின் மேல், ஒரு தடவை வலது கையால் விரல்களை விரித்தவாறு கால் விரலில் இருந்து ஆரம்பித்து கரண்டை கால் வரை தடவ வேண்டும். அதேபோன்று இடக்காலையும் அவ்வாறு செய்ய வேண்டும்.

**இதற்குரிய நிபந்தனைகள் வருமாறு:**

01. அணிகின்ற காலுறை சுத்தமானதாக இருக்க வேண்டும்.

02. பாதங்களை முழுமையாக மறைக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

03. வுழூஃ செய்தபின் அதை அணிய வேண்டும்.

## இதன் கால எல்லை:

இதன் கால எல்லையை பொறுத்தவரை ஊரில் உள்ளவருக்கு முழுநாளும், பிரியாணிக்கு மூன்று நாட்களும் வழங்கப்படும்.

காலுறை அணிந்த பின் முதன் முதலாக காலுறையின் மேல் தடவிய நேரத்திலிருந்து அந்த சலுகைக்காலம் ஆரம்பமாகும்.

உதாரணமாக ஃபஜ்ர் தொழுகைக்கு வுழூ செய்து காலுறை அணிந்து பின்னர் காலை 9 மணியளவில் வுழூஃ முறிந்து விட்டது என வைத்துக்கொள்வோம், மதியம் 12 மணிக்கு தடவ ஆரம்பித்தால் அவருடைய சலுகைக்கான காலம் 12 மணியிலிருந்து ஆரம்பமாகும்.

இச்சலுகை சிறிய தொடக்குகளுக்கு மாத்திரமே செல்லுபடியகும். குளிப்பு கடமையான பெருந்தொடக்குகளைப் பொறுத்தவரை அவற்றிற்கு பூரணமான குளிப்பு அவசியமாகும்.

ஒருவர் தன்னுடைய காலுறையை கழற்றிவிட்டால் அல்லது அதன் காலம் முடிவடைந்துவிட்டால் வுழூ முறிந்து விடாது. ஆனால் மீண்டும் ஒரு முறை தடவ வேண்டுமாயின் அவர் காலுறையை கழற்றி பூரணமாக வுழூ செய்ய வேண்டும். பின்னர் காலுறை அணிந்து மீழ தடவுவதை ஆரம்பிக்கலாம்.